# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## ஜயந்திபுர நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்)

**ஜயந்திபுர நலன்புரிச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம அவர்களால் 2015, திசெம்பர் மாதம் 11 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, நவெம்பர் மாதம் 23 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

**[ 50 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 10 .00**

## ஜயந்திபுர நலன்புரிச் சங்கம்
## (கூட்டிணைத்தல்)

### ஜயந்திபுர நலன்புரிச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

**முன்னுரை.** “பத்தரமுல்ல ஜயந்திபுர நலன்புரிச் சங்கம்” என அழைக்கப் படுவதும், அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப் பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கம் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக்கொண்டு நடாத்தும் நோக்கத்துடன் 1969ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தில் தாபிக்கப் பட்டுள்ளது :

அத்துடன் சொல்லப்பட்ட சங்கம் எந்தப் பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ள தாதலாலும் ; அது “கூட்டிணைக்கப்பட்ட ஜயந்திபுர நலன்புரிச் சங்கம்” என கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்துடன் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மை மற்றும் அனுகூலமாக இருக்குமாதலால் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**சுருக்கப் பெயர்.** **1**. இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, “ஜயந்திபுர நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்)” சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

**ஜயந்திபுர நலன்புரிச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.** **2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “சங்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஜயந்திபுர நலன்புரிச் சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்க ளாகவுள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத் தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப் படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப் படும்) ஜயந்திபுர நலன்புரிச் சங்கம் என்ற பெயர், விபரணம் மற்றும் சிறப்பியல்பின் கீழும் இடையறாபின்னுரிமை கொண்ட

ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன், அது அப்பெயர் கொண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம், அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்க வும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும்கொண்டதாய் இருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. ''கூட்டிணைக்கப்பட்ட ஜயந்திபுர நலன்புரிச் சங்கம்'' (இதன கத்துப்பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவன வாக இருத்தல் வேண்டுமென பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது :-

(அ) ஜயந்திபுரவில் வாழ்பவர்களின் பல்பக்க ஆக்கவ மைப்பை கவனத்திற்கு எடுத்துக் கொண்டு உறுப்பினர்க ளினதும் அவர்களில் சார்ந்திருப்பவர்களினதும் பரஸ்பர நலனோம்புகை வசதிகளை தூண்டுதலும், வளர்த்தலும், ஊக்குவித்தலும் ;

(ஆ) உறுப்பினர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் உரிமை, சுதந்திரம், சிறப்புரிமை ஆகியவற்றைப் பாதுகாத்தலும், பேணுதலும் ;

(இ) உறுப்பினர்கள் வசிக்கும் சூழலைப் பாதுகாத்தலும் அத்துடன் அதற்குப் பிரதிகூலமான பாதிப்பு ஏற்படா திருப்பதற்கும், இயற்கை சூழல், மரஞ்செடி கொடிகள் மற்றும் ஈர நிலங்கள் என்பவற்றை தான்தோன்றித்தன மாக அழித்தல், அவற்றுக்கு சேதங்களை விளைவித்தல் அல்லது தான்தோன்றித்தனமாக குறுக்கிடுதல் அல் லது அவற்றை தேவையற்ற விதத்தில் எடுத்துக் கொள் ளல் என்பன செய்யப்படாமல் இருப்பதற்கும், அவர்கள் வசிக்கின்ற மனதுக்கு ஒத்த சூழலுக்குப் பிரதி கூலமான பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்கும் பொறுப்பாய் இருத் தலும் ;

(ஈ) இயற்கை அனர்த்தங்கள் ஆகிய வெள்ளப்பெருக்கு, புயல், நிலநடுக்கம், தீ ஆகிய சந்தர்ப்பங்களில் உறுப் பினர்களையும் அவர்களது குடும்பங்களையும் பாது காத்தலும், பேணுதலும் அத்துடன் உதவி செய்தலும் ;

(ஊ) அவர்களது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணத்தினால் உறுப்பினர்களது உடல்நலம் மற்றும் சுகாதாரம் என்பவற்றிற்கு பாதிப்பு ஏற்படாதென்பதை உறுதிப்படுத்துதலும், உறுப்பினர்கள் மற்றும் பிராந்திய பொதுமக்களின் ஆகக் கூடிய நலனோம்புகையின் பொருட்டு, சகல உகந்த நிருவாக அதிகாரிகளும் அவர்களது பணிகளையும் பொறுப்புக்களையும் பயனுற நிறைவேற்றுகின்றமையை உறுதிப்படுத்துதலும் ;

(ஊ) தீ, வெள்ளப்பெருக்கு அல்லது இயற்கை அனர்த்தங்களுக்கு எதிராக சுகாதார காப்புறுதி, உயிர்க்காப்புறுதி, சமூகக் காப்புறுதி, விபத்துக் காப்புறுதி மற்றும் கூட்டு வீடமைப்புக் காப்புறுதித் திட்டங்களை கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ உறுப்பினர்களிடையில் ஏற்பாடு செய்தலும், மேம்படுத்துதலும், உறுதிப்படுத்துதலுமாகும் ;

(எ) சமூக நிலையமொன்று, பகல் பராமரிப்பு நிலையமொன்று, பாலர் பாடசாலையொன்றையும், உடற் பயிற்சி நிலையமொன்று, அத்துடன் அப்பிராந்திய முதியோர் மற்றும் சிரேட்ட பிரசைகளுக்கு வீடொன்றையும் தாபிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்தலும் இதற்காக அரசாங்கத்தினதும் அரச சார்பற்ற அமைப்புகளினதும் உதவிகளை பெற்றுக் கொள்ளுதலும் ;

(ஏ) தற்போதுள்ள அத்துடன் ஏற்படக்கூடிய சுகாதார பிரச்சினைகள் தொடர்பில் பரிசீலனை செய்யும் பொருட்டு காலத்துக்குக்காலம் சிகிச்சை முகாம்களை நடாத்தும் இயைபுள்ள அரசாங்க மற்றும் அரசாங்க சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து இலவசமாக அல்லது சலுகை அடிப்படையில் சுகாதார வசதிகளையும் பொருட்களையும் பெற்றுக்கொள்வதற்கு உறுப்பினர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் ஒத்துழைப்பும் நல்குதலும் ;

(ஐ) உறுப்பினர்களினதும் நலன் விரும்பிகளினதும் நன்கொடைகள் இதேபோன்று அரசாங்கம், உள்ளூ ராட்சி நிறுவனங்கள், அரசசார்பற்ற அமைப்புக்கள் என்பனவற்றின் உதவியின் மீது கூட்டுத்தாபனத்துக்கு இடவசதியுடன் கூடிய பரிபூரணமான தலைமையக மொன்றை நிருமாணிக்கும் பொருட்டு நிதியமொன்றை உருவாக்குதலும் அத்துடன் அப்படியான தலைமையகம் பின்வருவனவற்றை அடக்கியிருத்தல் வேண்டும் :-

(i) அலுவலகம், நூலகம் அத்துடன் வாசிப்பு மண்டபம், கேட்போர் கூடம் மற்றும் கலாசார நடவடிக்கைகள், சமூக ஒன்றுகூடல் மற்றும் உள்ளக விளையாட்டுக்களுக்கான மண்டப மொன்றும் ;

(ii) உறுப்பினர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலையிலிருந்து விலகிய மாணவர்கள் மற்றும் படித்த அப்பிராந்திய இளைஞர்களுக்கு பயனுள்ள தொழில்களை பெற்றுக் கொள்வ தற்கும் சுயதொழில் கருத்திட்டங்களுக்கு பயிற்று விப்பதற்குமான கணனி மற்றும் தகவல் தொழில்நுட்ப நிலையமொன்று.

(ஒ) பத்தரமுல்லை கடுவெல பிராந்திய மற்றும் உறுப்பினர் களின் பாடசாலையிலிருந்து விலகிய தொழிலற்ற படித்த இளைஞர்களின் நலனோம்புகையின் பொருட்டு வாழ்க்கைத் தொழில்பயிற்சி திட்டங்களை ஒழுங்கு செய்தலும் அதற்காக அவர்களை ஊக்குவித்தலும் ;

(ஓ) இப்பிராந்திய சகல வதிவாளர்களும் மேலதிக வருமான வழியொன்றாக செய்கையை மேம்படுத்தல் :-

(i) தொழிலிலிருந்து ஓய்வெடுப்பவர்கள், இளைப் பாறியவர்கள் அத்துடன் முதியோர்கள் தம்மை ஒழுங்கமைத்துக் கொள்ளவும் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய பணிக்கொடை, ஓய்வூதியம், சேமலாப நிதியங்களில் நிலவும் முரண்பாடு களை சீர்செய்து பெற்றுக்கொள்வதற்கு உதவவும்;

(ii) கூட்டுத்தாபனத்தினால் ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ள மரண உதவித் திட்டத்தை தொடர்ந்தும் நடாத்திச் செல்லுதலும் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு இயலுமான எல்லாவித உதவி செய்தலும்;

(ஔ) வீதி விளக்கிடல், வீதிப்பராமரிப்பு உட்பட ஏனைய வசதிகளை ஏற்பாடு செய்வதன் மூலம் ஜயந்திபுர வீடமைப்புத் திட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு உகந்த அதிகாரிகளை ஊக்குவித்தலும் ;

(க) தற்போது கூட்டுத்தாபனம் என அழைக்கப்படுகின்ற சங்கத்தின் குறிக்கோள்களை, நோக்கங்களை நிறைவேற்றுதல் அல்லது அடையும் பொருட்டு தேவையான இடைநேர்விளைவான எல்லா விடயங்களையும், பணிகளையும், நிறைவேற்றுதலும் நடைமுறைப்படுத்துதலும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் நிருவாகம், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைவாக, இந்த சட்டத்தினதும் கூட்டுத்தாபனத்தின் ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுக்கும் அமைய கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே இருந்து பொதுக்கூட்டமொன்றில் அல்லது விசேட பொதுக் கூட்டமொன்றில் உரியவாறு தெரிவு செய்யப்பட்ட அத்தகைய எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களையும் ஏனைய உறுப்பினர்களையும் கொண்ட முகாமைத்துவச் சபையொன்றினால் நிர்வகிக்கப்படல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த சங்கத்தின் முகாமைத்துவக் குழு, கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபையாதல் வேண்டும்.

(3) முகாமைத்துவ சபையின் எவரேனும் உறுப்பினர் ஒருவர் நீக்கப்பட்டு, இராஜினாமா செய்து அல்லது மரணிக்கும் சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற வெற்றிடமானது இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்துடன் உரிய காலத்தில் நடைமுறையில் உள்ள கூட்டுத்தாபன ஒழுங்குவிதிகளுக்கு இயைபாக நிரப்பப்படுதல் வேண்டும்.

ஆதனங்களைச் சுவீகரித்தல் நிதி முதலீடு மற்றும் கடன் ஆகியன எடுப்பதற்கு கூட்டுத்தாபனத்திற்குள்ள தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, பின்வரும் தத்துவங்கள் கூட்டுத்தாபனத்திற்கு உள்ளது :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படும் காணிகள் அல்லது கட்டடங்களைக் கொள்வனவு செய்வதற்கு, வாடகைக்கெடுப்பதற்கு, நிருமாணிப்பதற்கு அத்துடன் வேறு விதத்தில் பெற்றுக்கொள்வதற்கும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் எந்தவிதமான சொத்துக்கும் பாதிப்பேற்படாதவாறு கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட (உள்நாட்டு, வெளிநாட்டு) வங்கியிலிருந்து அத்துடன் நிறுவனங்களிடமிருந்து பணத்தை கடனாக எடுப்பதற்கும் அல்லது சேகரிப்பதற்கும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கும், தொழிலுக்கமர்த்துவதற்கு, அவர்களை பதவியிலிருந்து நீக்குவதற்கு அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துவதற்கு அத்துடன் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும் படிகளையும் பணிக்கொடைகளையும் அவர்களுக்குக் கொடுப்பதற்கும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் அல்லது எல்லா குறிக்கோள்களையும் இந்தக் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களின் நலனோம்பலை அடையும் பொருட்டு உள்நாட்டு அதே போன்று வெளிநாட்டு அரசுடைமையான, பகுதி அரசுடைமையான, உள்ளூராட்சி அல்லது அரசசார்பற்ற அமைப்புக்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் எதிர்பார்த்தலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கும் அதே போன்று அத்தகைய சேவைகள் தேவைப்படுகின்ற பொது மக்களுக்கும் பயனுள்ள சமூக சேவைகளை ஏற்பாடு செய்தலும் ;

(ஊ) எவரேனும் ஆள் ஒருவருடன், கம்பனியொன்றுடன் அல்லது சபையொன்றுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்கும் ;

(எ) விதித்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நியமங்களுக்கிணங்க உறுப்பினர்களுக்கான நுழைவுக் கட்டணம் அல்லது சங்கத்தின் (கூட்டுத்தாபனத்தின்) உறுப்பினராக இருந்த ஆள் ஒருவருக்கு அல்லது ஆட்களுக்கு மீண்டும் நுழைவுக்கான கட்டணம் அறவிடுதலும் ;

(ஏ) வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கும், தொழிற்படுத்துவதற்கும் அத்துடன் மூடிவிடுவதற்கும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை, சபை பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும் ;

(ஒ) எல்லா வகையான அங்கத்துவத் தொகைகளையும், மானியங்களையும், நன்கொடைகளையும், வெகுமதிகளையும் கோருவதற்கும், பெற்றுக் கொள்வதற்கும் ; அத்துடன்

(ஓ) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் அல்லது எல்லா குறிக்கோள்களையும் அடையும் நோக்கில் அவசியமான அல்லது நலமளிக்கின்ற மற்றும் செயல்துணையான சகல நடவடிக்கைகளையும், பணிகளையும் புரிதலும்.

**6.** (1) பின்வரும் விடயங்கள் தொடர்பாக இச்சட்ட ஏற்பாடுகளுக்கும் அல்லது வேறு ஏதாவது எழுத்திலுள்ள சட்டத்திற்கும் இசைவாக, கூட்டுத்தாபன கூட்டத்தில் சமூகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு வாக்குகளின் மூலம், காலத்திற்குக் காலம் விதிகளை ஏற்படுத்தல் கூட்டுத்தாபனத்திற்கு சட்டமுறையானதொன்றாகும் :- கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(அ) உறுப்பாண்மையின் வகுப்பாக்கமும், ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த உறுப்பினரால் கொடுபடற்பாலதான கட்டணங்களும், அவர்களைச் சேர்த்துக் கொள்ளுதலும் அவர்கள் விலகுதலும், அவர்களை விலக்குதலும் அல்லது இராஜினாமாவும் ;

(ஆ) முகாமைத்துவ சபையைத் தெரிவு செய்தல், சபையின் பதவி தாங்குநர்கள் பதவியைத் துறத்தல் அல்லது அவர்கள் பதவியிலிருந்து அகற்றப்படுதல் மற்றும் தத்துவங்கள் கடமைகளைக் கையளித்தல் அத்துடன் முகாமைத்துவ சபை நடாத்தப்படுதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வகைக் குழுக்கள், உபகுழுக்கள், முகவர்கள் மற்றும் ஊழியர்களது நடத்தை மற்றும் நியமனம், அதிகாரங்கள், கடமைகள் தொழிற்பாடுகளை கையளித்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ சபை அல்லது ஏதேனும் உபகுழு என்பவற்றின் கூட்டங்களைக் கூட்டும்போது அத்துடன் கூட்டங்களை நடாத்தும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைமுறை, வெற்றிடங்களை நிரப்புதல், அத்தகைய கூட்டங்களுக்கான அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல் அதற்கான குறைந்த அங்கத்துவ எண்ணிக்கை அத்துடன் அதில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் ;

(உ) முகாமைத்துவ சபையினதும் அத்துடன் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பாண்மைக்கான தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் அத்துடன் பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைப்படுத்தி அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) ஏதேனும் பொதுக் கூட்டத்தில் அல்லது விசேட கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளின் மூலம் தவிர வலுவில் இருக்கும் கூட்டுத்தாபனத்தின் ஒழுங்குவிதி எதனையும் அல்லது இதன் பின்னர் ஆக்கப்படக்கூடிய ஒழுங்கு விதி எதனையும் திருத்தவோ மாற்றம் செய்யவோ சேர்க்கவோ அல்லது இல்லாதொழிக்கவோ கூடாது ;

(3) இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருக்கும் நிறுவனத்தின் விதிகள் இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் முரணற்றதாக இருக்கும் வரையில் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் எனக் கருதப்படல் வேண்டும் ;

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் வலுவிலிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு கீழ்ப்பட்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்திற்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை மறுசீரமைக்கும், மேம்படுத்தும், அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனமானது ஏதேனும் தேய்மான நிதியத்தை அல்லது அந்நிதியைத்தைத் தாபிக்கலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள் மற்றும் தொழிற்பாடுகளை புரிவதில் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படும் செலவினங்கள், கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து அளிக்கப்படல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**8.** (1) முகாமைத்துவ சபையினால் கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பிலான முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோர் ஆண்டும் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட பட்டயக்கணக்காய்வாளர் அல்லது பதிவுசெய்யப்பட்ட கணக்காய்வாளர் அல்லது பட்டயக் கணக்காளர்களது வியாபார தாபனத்தினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

வருமானத்தையும் ஆதனத்தையும் பிரயோகித்தல்.

**9**. கூட்டுத்தாபனத்தின் வருமானமும் ஆதனமும் அவை எவ்வாறு பெறப்பட்டிருப்பினும் சரி. இதன்கண் தரப்பட்டுள்ள குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப் படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பகுதி எதுவும் பங்கு இலாபம், பணிக்கொடை அல்லது வேறுவகையில் இலாபம் என்ற வகையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ கூட்டுத்தாபனத் தின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ மாற்றப்படுதலோ ஆகாது.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**10**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, முகாமைத்துவ சபையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகாமைத்துவ சபையின் இரு உறுப்பினர்களினதும் அத்துடன் பொதுச் செயலாளர் அல்லது குறித்த நோக்கத்திற்காக முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்படக்கூடிய அத்தகைய வேறு அலுவலர் ஒருவரது முன்னிலையில் அன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. மேற்சொன்ன முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள் அத்துடன் பொதுச் செயலாளர் அல்லது ஏனைய உத்தியோகத்தரினால் தமது முன்னிலையில் கூட்டுத்தாபனத்தின் இலச்சினை பொறிக்கப்படுகின்ற எல்லா சாசனங்களிலும் கைச்சாத்திடுதல் வேண்டும்.

கலைக்கப்படுதல் அல்லது முடிவுறுத்தல்.

**11**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மேல் அல்லது முடிவுறுத்தலின்மேல் அதன் எல்லாக் கடன்களும், பொறுப்புக் களும் கொடுத்துத் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தன்மைக்கான ஆதனம் எதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனமானது, கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப் படுதல் ஆகாது. முகாமைத்துவ சபையின் தற்றுணிபின்பேரில் இந்தக் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள் களையுடையதும் அல்லது உடையனவும் அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர் களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளமையுமான வேறு ஏதே னும் நிறுவனமொன்றுக்கு அல்லது நிறுவனங்களுக்கு கொடுக்கப் படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். இந்தப் பிரிவின் மேற்சொன்ன ஏற்பாட்டின் பிரகாரம் ஏதேனும் ஆதன மொன்றை அல்லது ஏதேனும் பகுதியொன்றை விடுவிக்க முடியாததாயின் அந்த ஆதனத்தை அல்லது அதனொரு பகுதியை முகாமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் புண்ணிய நோக்கத்திற்காகப் பயன்படுத்துதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.*

***12***. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளோரினதும் அவர்களுக்காக அவர்கள் சார்பில் அவர்களின்கீழ் கோருவோரும் தவிர வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***13***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்